விலை : ரூ 3/50

# இந்து கலா சாரம்

## இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர் : திரு. ஆர். வைத்தமாநிதி

மலர் : 2 ★ திருவள்ளுவர் ஆண்டு 2021 கார்த்திகைத் திங்கள் 3ம் நாள் (19-11-1990) ★ இதழ் : 8

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
பதிவு இல. 73
10. 5 1950
14896
7. 6. 1968

ஓம் ஓம் என்று அலறுகின்றோம் ஓம்

ஓம் ஓம் என்று கதறுகின்றோம் ஓம்

ஓம் ஓம் என்று பதறுகின்றோம் ஓம்

ஓம் ஓம் என்று உன் அருள் பெறுவோம் ஓம் — இறைவா!

ஓம்

சாந்தி — ஓம்

சமாதானம் — ஓம்

பிரார்த்திப்போம் — ஓம்

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்

# நமது நோக்கு

## யாகத்தின் தியாகம்!

மனம் வேதனை அடைகின்றது. நியானம் சயன மடைய மறுக்கின்றது. வேள்வி கேள்விக்குறியாக மாறி இருக்கின்றது.

யாரிடம் நோவேன்
யாருக்கு எடுத்து உரைப்பேன்
ஆண்டவனே உன் அருள் இல்லையென்றால்?

என்று இரண்டு மாதங்களுக்கு முன் இந்து கலாசாரத்தில் முகப்பிலே எழுதி இருந்தோம். மீண்டும் இதை மாதம் — மாதம் தலைப்பாக — தாரக மந்திரமாக பிரசுரித்து இந்துக்கள் யாவரினதும் மனதில் உருகப் பாராயணம் செய்து அவன் தாள் வணங்கி நிற்க அனைவரையும் சிரம் தாழ்த்தி கரம்கூப்பி வேண்டுகின்றோம்.

ஆம் கொழும்பு நகரிலே ஆன்மீக மார்க்சத்தில் ஏழை எளியவர்களுக்கு தொண்டு செய்யும் புனித எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட ஆதுரஸ்சாலை சத்தியத்திற்கு சோதனைபோல் அநாகரீகமாக, அவமானப்படக்கூடிய வகையில் யாகம் — தியகமாகத் தாக்கப்பட்டுள்ளது.

மதத்தால் பிரிந்தாலும், மொழியால் இணைந்தோம். எம்மதமும்—சம்மதம், இறைவன் ஒருவனே அவன் நம் அனைவரையும், நல்ல காரியங்கள் செய்வதையே விரும்புகின்றவன். இதற்கு விதிவிலக்காக யாரும் செயற்படுவதை எந்த தர்மமும், தத்துவமும் மதமும் ஏற்றுக்கொள்ளாது. எனவே நான் எனது என்று இல்லாமல் நாம் — எமது என்று புரிந்து, தெரிந்து காரியங்களில் ஈடுபட்டு உய்வோமாக!

நாம் யாருக்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம், நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம், பணிவோம்
அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.

சங்கரனே நின்பாதம் போற்றி! போற்றி!
சதாசிவனே நின்பாதம் போற்றி! போற்றி!
பெங்கரவா நின்பாதம் போற்றி! போற்றி!
புண்ணியனே நின்பாதம் போற்றி! போற்றி!

## நன்றிகள் பல!

எமது ஆசிரியர் திரு ஏ. எம். துரைசாமி அவர்கள் தமது ஐரோப்பிய நாடுகளுக்கான கலாசார விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார். பல்வேறு இந்து மன்றங்களும், சைவப் பெருந்தகைகளும் குறிப்பாக சைவமுன்னேற்றச் சங்கம் லண்டன் கிளையினரும் எமது ஆசிரியருக்கு அளித்த வரவேற்பையும், எமது மன்றத்திற்கு அளித்த சேவை மனப்பான்மையையும் என்றென்றும் நாம் நினைவுகூர்வதோடு, அவைகளுக்கு எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், ஆசிரியர் தமது விஜயத்தைப்பற்றியும் அந்நாடுகளிலுள்ள சைவத் திருத்தலங்களைப்பற்றியும் படங்களுடன் அடுத்தடுத்த இந்து கலாசார இதழில் வெளியிடுவார்.

— ஆசிரியர்.

## எமது வாசகர்களுக்கு

இந்து கலாசாரம் — இந்து சமய திங்கள் இதழ் வெளிவரத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் முற்றுப்பெற இருப்பதை வாசக நேயர்கள் அறிவார்கள். இந்த இரண்டு வருடத்தில் நமது சக்திக்கு ஏற்ப எம்மால் இயன்ற சமயப் பணியை செய்துள்ளோம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் பல சமயப் பெரியார்களின் ஆதரவையும் பாராட்டையும் பெற்றுள்ளோம்.

இன்று காகித விலையும் அச்சுக் கூலியும் விஷம் போல் ஏறிக்கொண்டிருப்பது நேயர்கள் அறியாததல்ல எமது சந்தாவை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்பட்டிருக்கிறோம்.

1991ம் ஆண்டு தைத்திங்கள் முதல் இந்து கலாசாரத்தின் ஆண்டுச் சந்தா ரூபாய் 75.00 ஆகவும் தனிப்பிரதியின் விலை ரூபா 5.00 ஆகவும் உயர்த்தியுள்ளோம். சமயப் பணியையே குறிக்கோளாகக் கொண்டு வெளிவரும் நமது சஞ்சிகையின் விலையுயர்வை வாசக நேயர்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என நம்புகிறோம்.

இந்து கலாசார மன்றம்
கொழும்பு.

# ஆலயக் கடமைகளோடு சமுதாய முன்னேற்றத்தையும் காணவேண்டும்



கடந்த 24ம், 25ம் திகதிகளில் அவிசாவளைப் பிரதேசத்தில், பல்வேறு தோட்டங்களில் சமய கலாசார நடவடிக்கைகளை இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சு மேற்கொண்டது. பின்தங்கியுள்ள இப்பிரதேசங்களில் ஒரு எழுச்சியையும் விழிப்புணர்வையும் தோற்றுவிக்கும் நோக்குடன் அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் பணிப்புரையின்பேரில் அமைச்சு அதிகாரிகள் பலரும் இவற்றில் கலந்துகொண்டனர். இதன்மூலம் நேரடியாக இம்மக்களை சந்திக்கவும் அவர்களது பிரச்சினைகளை புரிந்துகொள்ளவும் இவ்விரண்டு நாள் நடவடிக்கைகள் ஏதுவாக அமைந்தன.

முதல் நாளான 24ம் திகதி அவிசாவளை சென் மேரிஸ் வித்தியாலயத்தில் கலைவிழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அன்று அமைச்சருடன் இணைப்பதிகாரி திரு. நித்தியானந்தன், கலாசார உத்தியோகத்தர் திரு. மாத்தளை வடிவேலன், ஆகியோர் கலந்துகொண்டனர். கலைவிழாவிற்கு சிறப்பு விருந்தினராக மேல்மாகாணசபை உறுப்பினர் திரு. ஏ. எம். டி. இராஜன் அவர்களும் கலந்துகொண்டார்.

**எம். சண்முகநாதன்**

வரவேற்புரை நிகழ்த்திய பாடசாலையின் அதிபர் பாடசாலைக் குறைபாடுகளை முன்வைத்தார்.

அமைச்சர் பதிலளித்துப் பேசுகையில்;

இங்கு சிங்களப் பாடசாலையில் மாலைநேர தமிழ் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதனை காலைநேர வகுப்புகளாக மாற்றுவதற்குரிய முயற்சிகளை நாம் மேற்கொள்வோம். அத்துடன் மலையகத்தின் கல்விப் பிரச்சினைகளை நாம் கல்வி அமைச்சுடன் அவ்வப்போது கலந்துரையாடுகின்றோம். எமது பிரச்சினைகளை அவற்றின்மூலம் தீர்ப்பதில் வெற்றியும் கண்டுள்ளோம். ஆனால் எனது அமைச்சு இந்துசமய நடவடிக்கைகளுக்கும், தமிழ் அலுவல்களுக்கும் பொறுப்பானது. மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சியை பிரதானமாகக் கருதி அறநெறிப் பாடசாலைகள் ஆக்குவதில் முனைப்பாக உள்ளோம். ஆலயக் கடமைகளோடு ஆலயத்திலிருந்து எமது சமுதாய முன்னேற்றத்தை நாம் காண வேண்டும். எனக் குறிப்பிட்டார்.

மறுநாள் நிகழ்ச்சியின்போது அமைச்சர் தேவராஜ் அவர்களுடன் திருமதி தேவராஜ், அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசி திருமதி கீதா நித்தியானந்தன் இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. கே. சண்முகலிங்கம், அமைச்சரின் ஆலோசகரும், கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. சோ. சந்திரசேகரன், கலாசார அலுவலர் திரு. மாத்தளை வடிவேலன், தகவல் அலுவலர் திரு. ம. சண்முகநாதன், அமைச்சு இணைப்பதிகாரி திரு. ஆர். நித்தியானந்தன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் கட்டுப்பாட்டாளர் திரு. ஹரிஹரசர்மா, பண் இசைச் கலைஞர் திருமதி பாலாம்பிகை நடராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முதலில் புவக்பிட்டிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூஜைகளின் பின் புவக்பிட்டிய சி. சி. தமிழ் மகா வித்தியாலயத்தில் கலைவிழா இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திரு. எஸ். கனகரட்ணம், இ. தொ. கா. அமைப்பாளர் திரு. கந்தையா ஆகியோர் அப்பாடசாலையின் நூற்றி ஆறு வருட சரித்திரத்தை எடுத்துக் கூறியதோடு இன்றைய பின்தங்கிய நிலையையும் விளக்கினார். அதன்பின் உரை

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

# பகவான் சத்திய சாயி


'மகான்கள் பிறப்பது இல்லை, அவதரிக்கிறார்கள்' என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். பல அவதார புருஷர்கள் புண்ணிய பாரதத்தில் பிறந்து அஹிம்சையையும், தர்மத்தையும் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து மக்களுக்கும் அவ்வழியை காட்டி இருக்கிறார்கள்.

இன்று நடமாடும் தெய்வம், பேசும் தெய்வம் என பல ஆயிரம் பக்தர்கள் கூறி வணங்கும் தெய்வமாகவே சத்திய சாயி விளங்குகிறார்.

ஷீர்டி பாபா மறைந்த பிறகு சரியாக எட்டாண்டுகள் கடந்து 1928ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்ற கிராமத்தில் அவதரித்திருக்கிறார்.

சத்தியநாராயணன் என்பது வீட்டுப் பெயர். ஷீர்டி பாபாவின் மறு அவதாரமே இந்த மகான் என்பதற்கும் சான்றாக சாயி பக்தர்கள் பல நிருபணங்களைக் காட்டுகிறார்.

உதாரணமாக, கிண்டி ரெயிலடி அருகில் சத்திய சாயியின் திருப்பாத பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். சத்திய சாயியின் திருப்பாதங்களின் அளவை விடக் கொஞ்சம் பெரிதாக இருக்கிறது. இது ஏனெனில் அவர் ஷீர்டி பாபாவாக இருந்தபோது இருந்த காலின் அளவு.



பகவான் சத்திய சாயி பாபாவின் 65வது பிறந்த தினம் லண்டன் வெம்பிள்டன் நகரிலுள்ள சாயி மந்திரின் ஆதரவில் கொண்டாடப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். இங்கு நடைபெறும் பஜனைகளில் ஆங்கிலேயர்கள் பெருமளவில் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

பகவான் சத்திய சாயி என்ற திருநாமம் பல பக்தர்களுக்குத் தாரக மந்திரமாக விளங்குகிறது. பகவான் நிறுவியுள்ள சேவாதளம் என்ற தொண்டர் அமைப்பு பகவானின் அருள்மொழிகளைக் கிராமங்களில் பரப்பி வருவதுடன் கல்வி, குடிநீர் மருத்துவம் போன்ற வசதிகளையும் செய்து வருகிறது. சத்திய சாயியின் அறக்கட்டளை மேற்கொண்டிருக்கும் பல்வேறு பணிகளைப் பார்க்கும்போது சாதாரண ஒரு மனிதரால் இதை சாதிக்க முடியாது என்பது தெளிவாகும்.

கண் இழந்தோருக்கு கண், உடல் ஊனமுற்றோருக்கு தகுந்த மருத்துவ வசதி, ஆன்மீகத் துறையில் மக்களின் நாட்டம் திரும்புவதற்கேற்ற உபநியாசத் தொடர்கள், ஆன்மீகம் இணைந்த உயர்தரக்கல்வி வசதி, இளம் மனதைச் செம்மைப்படுத்தும் பயிற்சி முகாம்கள், இறைவன் நாமத்தை ஜபிக்கும் யக்ஞங்கள், அளவில்லாத அன்னதானம் என்று அவருடைய பணி விரிவடைந்திருக்கிறது.

க. யோகமூர்த்தி

பகவானின் இளமைப் பருவமே சாதாரண முறையில் அமைந்திருக்கவில்லை. கண்ணனைப்போல பல அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஆரம்பப் பள்ளிப் படிப்பு முடிந்ததும், இவருடைய தந்தையார் இவரை உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார். பதின்மூன்று வயதானபோது சத்தியநாராயணன் நோய்வாய்ப்பட்டார். பிள்ளையின் நோயைத் தீர்க்க தந்தை பிரபல மருத்துவர்களை நாடினார். எந்த மருத்துவத்திலும் நோய் தீரவில்லை.

இந்நிலை இரண்டு மாதம் நீடித்தது. தானாகவே வந்த நோய் தானாகவே குணமாகிவிட்டது. பரமாத்மா, ஜீவாத்மாப் போராட்டத்தில் பரமாத்மா தத்துவம் வென்றுவிட்டது. சிறுவனிடம் அதிக சக்திகள் காணப்பட்டன.

முன்பின் கண்டறியாத மொழிகளில் ஸ்லோகங்கள் இயற்றினான். சமஸ்கிருதத்தில் பேசினான், வேதங்களுக்கு விளக்கம் கூறத் தொடங்கினான். இவ்வற்புதத்தைக் கண்ட அன்பர்கள் அடைந்த வியப்புக்கு அளவேயில்லை. 1940ஆம் ஆண்டு மே மாதம் ஒரு நாள் சில அன்பர்கள் நீ யார்? என்று சிறுவன் சத்தியநாராயணனிடம் கேட்டபோது நான்தான் சாயிபாபா என பதில் வந்ததாம்.

ஷீர்டி பாபாவைப்பற்றி அறியாத அந்த கிராமத்து மக்கள் எல்லோரும் சிறுவனின் உடலில் ஏதோ, ஆவி புகுந்துவிட்டது என்று கூறத் தொடங்கினார்கள். ஆனால் அவருடைய தெளிவும் தெளிந்த விளக்கங்களும், செயலும் மக்களின் சந்தேகத்தைப்போக்கின.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

# இந்துமதம்

பழமையில் வேரூன்றி என்றும் புதுமையாய் காட்சிதரும் இந்துமதம், உலகம் தழுவிய மதம். உலக வாழ்க்கையை நேசித்து வாழச் சொல்லும் இந்துமதம், உலகம் வாழ்ந்தால் தனிநபரும் வாழலாம் என்பது இந்துக்கள் கண்ட அறநெறி.

உலக ஷேமத்துக்காக வேள்வி நடத்துகிறவர்கள் இந்துக்கள். உலக நலம் காண உபாசனை செய்தவர்கள் இந்து ரிஷிகள். எனவேதான் இந்துமதம் கண்ட விழாக்களிலும், பண்டிகைகளிலும், தோட்டப்புறங்களில் நடைபெறும் தொன்மையான நிகழ்ச்சிகளிலும்கூட கூட்டுச்செயல்முறையைக் காணமுடிகிறது. தனி மனிதர் சிந்தனையை இந்துமதம் ஏற்றுக்கொண்டதுபோல வேறு எந்த மதமும் மதித்து ஏற்றுக்கொண்டதில்லை.

வாள் முனையை நம்பி இந்துமதம் வாழ்ந்ததில்லை. வாதத்திறமையை நம்பியே அது வரலாற்று பயணத்தை நடத்தியிருக்கிறது. வன்முறையாளரையும் நன்முறைக்குத் திருப்பிடும் சக்தி படைத்த மதம் இந்துமதம்.

இந்துமதம் அறிவுபூர்வமான மதமாகவும், விஞ்ஞானபூர்வமான மதமாகவும் விளங்கி காலத்தின் சவால்களுக்கு ஈடுகொடுத்து, மகோன்னதமான மதமாக இன்றைக்குக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

அறிவுபூர்வமான மதமாக இந்துமதம் அமைந்துள்ள காரணத்தால்தான் அது ஏனைய மதங்களை இழித்தும் பழித்தும் பேசுவதில்லை. நடைமுறைகள் வேறுபட்டாலும் அழியாத பரம்பொருள் ஒன்றே என்று இந்துமதம் உரத்து கோஷிக்கின்றது. பாவிகள் என்று நாமகரணம் சூட்டி இந்துமதம் எவரையும் அழைப்பதில்லை.

கீதோபதேசம் செய்யும் கிருஷ்ண பரமாத்மா தெளிவாகவே குறிப்பிடுகிறார், ''முத்துக்களைக் கோர்த்து நிற்கும் இழைபோல எல்லா மதங்களிலும் நான் இருக்கிறேன். மனித இனத்தைப் புனிதப்படுத்தும் எந்த மார்க்கத்திலும் நான் பிரசன்னமாகி இருக்கிறேன்''. ஏனைய மதங்களின் தாத்பரியங்களையும் அங்கீகரித்து இப்படிச் சொல்லப்பட்ட ஒரு கருத்தினை வேறு எந்த மதத்திலாவது காட்ட முடியுமா?

மனிதனை மனிதனாக வாழச்செய்கின்ற மார்க்கத்தைக் காட்டுகின்ற ஒரு புனிதமான அமைப்பு மதம் ஆகும். மனிதனை ஆன்மீக வழியிலே உற்சாகப்படுத்தி அவனை ஒரு மதவாதியாக கட்டி எழுப்புகின்றது. இவ்வாறு இயங்கும் மதங்கள், நமது கொள்கைகள்; வழிபாடுகள் பல கூறுகளாகப் பிரிந்து தொழில்படுகின்றன. இதனால்தான் மனிதன் பற்பல மதங்களில் மனதைச் செலுத்துவதால் மதம் மனிதனை மாற்றுகின்றது. மதத்தை மனிதன் மாற்றுகின்றான்.

எந்த நிலையில் இருந்து பார்த்தாலும் விஞ்ஞான யுகத்துக்கேற்ற விழுமிய மதம் இந்துமதம் என்பது புலனாகும். பொருள்களின் தன்மைகளை ஆராய்கின்றது இந்துமதம்.

கா. சின்னையா

விஞ்ஞான உண்மைகளை எந்த மதத்தினர் கண்டுபிடித்தாலும், எப்படி மானிட இனம் அனைத்துக்கும் சொந்தமானவையோ அதுபோலவே இந்து மத ரிஷிகள் கண்டு உலகுக்குச் சொன்ன உண்மைகள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை.

பல தெய்வ வணக்கம் இந்துமதத்தில் இருப்பினும் அதன் லட்சியம் தெளிவானது. ஒவ்வொருவரும் அவருடைய மனோதர்மத்துக்கு ஏற்ப முருகனாகவும், திருமாலாகவும், சிவனாகவும், சக்தியாகவும் உருவகப்படுத்தி வழிபட்டாலும் முடிவில் அவர்கள் நோக்கமெல்லாம் இறை நிலையை உணர்த்துவதுதான்.

இந்த தெய்வங்களுக்கெல்லாம் வெவ்வேறு ஆலயங்கள் இருப்பினும் அல்லது ஒரே ஆலயத்தில் வெவ்வேறு தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பினும், இவ் ரூப பேதங்கள் சர்வவல்லமை படைத்த இறைவன்பற்றி மனிதர்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட வடிவங்களேயாகும்.

ரூப பேதங்கள் இறைவனுக்கு இல்லை, பல்வேறு ஆலயங்களில் வெவ்வேறு தெய்வங்கள் வழிபாட்டுக்கு உரியனவாக இருந்தாலும் இறைவன் ஒருவனே என்பதுதான் இந்துமதத்தின் கோட்பாடு.

ஒவ்வோர் இந்துவும் தன்னுடைய அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற வகையில் ஏதோ ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு தன்னுடைய வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புப் பெற்றவனாக இருக்கிறான்.

இந்துமதம் யாரையும் மதத்துரோகி என்று அழைப்பதில்லை. வாழ்வின் பொது விதிகளை, நிய

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



## அரிவையர் அரங்கு

தயாரிப்பு: ஸைனா சாந்தி

# திருமாங்கல்யத்தின் மகிமை

இல்லறமென்பது ஒரு அழகான பூஞ்சோலை. இதில் ஆணும் பெண்ணும் அன்பின் இறுக்கத்தினால் ஒருவரையொருவர் புரிந்துணர்வு கொண்டு உள்ளப் பரிமாறலில் உனக்கு நான் எனக்கு நீ என்னும் அன்பினால் கட்டப்பட்டு ஈருடல் ஒருயிராகி வாழ்வில் மணம் கமழ ஆரம்பிக்கின்றது. இவ்வாறு மணங் கமழும் வாழ்வில் பெண்ணானவள் தன் உள்ளார்த்தமான அன்பினை எல்லாம் கணவனிடத்தில் கொட்டி தன் ஒழுக்க நெறியினின்று தவறாத பெண்ணே கற்புடைய நங்கையாவாள். இந்நிலையில் பெண்ணானவள் தன் பெற்றோர், உற்றார், சகோதரர்களிடம் வைத்திருந்த பாசம் எல்லாம் பிரிந்து கணவனிடம் மட்டும் ஒருங்கிணைந்து கணவனே தன் வாழ்வின் கண்+அவன் எனும் கருத்தினைக்கொண்டு இன்பத்திலும், துன்பத்திலும், வெற்றியிலும், தோல்வியிலும், விரக்தியிலும், வேதனையிலும்; அன்னையாக—தந்தையாக—நண்பராக—மந்திரியாக இணை பிரியாது ஆயுள் முழுவதும் வாழ்க்கைத் துணைவியாகிறாள். இதனை உலகினருக்கு அறிவிக்கும் பொருட்டேதான் அவள் கணவனிடமிருந்து திருத்தாலியினை அணிவித்துப் பெறுகிறாள். இதுவே இந்துமதப் பண்பாட்டின் அடையாளச் சின்னமாக புனிதம் பெறுகிறது.

தலைவனது தாள் (பாதம்) அமைந்த சின்னம் பொறித்து அதனை அவன் தலைவிக்கு ஈவதனால் தாள்+ஈ—தாளி என்பது நாளடைவில் தாலி என வழங்கலாயிற்று.

இத்தாலியின் தொன்மையும் தனித்துவத்தையும் நோக்குமிடத்து அது தமிழரின் அற வாழ்க்கைக்கும் ஒழுக்க நெறிக்கும் இந்து கலாசார கட்டுப்பாட்டிற்கும் பெருமை பெற்றதென்பதை நாம் உணர வேண்டும். இந்த திருத்தாலியின் பெருமையை விளக்க;

தாயோ டறுசுவை போம்
    தந்தையொடு கல்வி போம்
சேயொடு தான்பெற்ற செல்வம் போம்-ஆயவாழ்வு
    உற்றாருடன் போம்
உடன் பிறப்பாற்றோன் வலி போம்
    பொற்றாலி யோடெவையும் போம்!

என்பதை எமது தமிழ் மூதாட்டி ஔவை இப்படிக் கூறினார்.

இத்திருத்தாலியினை மணமகன் மணமகளின் கழுத்தினிலே கட்டும்போது சிவாச்சாரியார்கள்;

மாங்கல்யம் தந்துனாமே மம ஜீவன ஹேதுனா
கண்டேபத் துனாமி சுப ஹேத்வம் ஜீவ சா
தாம்சதம்

எனும் வடமொழி சுலோகத்தை உரைக்கிறார்கள். அதாவது; ஓ! கன்னிகையே நீ என் நல்வாழ்வின் பொருட்டு, நற்சேமத்தை கொடுப்பதற்காக இந்தப் புனிதமான மாங்கல்ய முத்திரை பொறிக்கப்பட்ட நாணினை நின் கழுத்தினில் அணிவிக்கிறேன். அதன் மூலம் நீ எப்பொழுதும் சுபசீவியாக என்னுடன் ஒன்றிணைந்து இல்லறப் பண்பை இயைந்து பரிபூரண ஆயுளுடன் வாழ்வாயாக! என்று கூறுவதாகும்.

### மூன்று முடிச்சு

இந்த முறையில்தான் அம்மி மிதித்தலும்: ஓ பெண்ணே! நீ இந்தக் கல்லின் மீது ஏறு, இல்லறத்தில் என்ன துன்பம் வந்தாலும் கற்பு நிலை தவறாமல் இந்தக் கல்லைப்போல் உறுதியாக அசையாமல் இரு என்பதாகும். அதேபோல் மாலை மாற்றலும்: பால்பழம் கொடுத்தலும் இடம்பெறும். பொதுவாக ஒருவர் அணியும் மாலையை இன்னொருவர் அணியக்கூடாது என சாஸ்திரம் கூறும். ஆனால் கல்யாணத்தின்போது பெண்ணும் பிள்ளையும் மாலை மாற்றுவதால் அன்றிலிருந்து அவர்களிருவரும் ஒன்றாகிவிட்டனரென்பதை குறிக்கிறது. இத்தாலியின் மூன்று முடிச்சு என்பார்களே; அவை மூன்றும் முறையே, கணவனுக்கு-பெற்றோருக்கு-கடவுளுக்கு என்றும் கூறப்படுகிறது. அத்துடன் இத்தாலியின் புனிதத்தன்மையைப் பாதுகாக்க இந்து பண்பாட்டு பழக்கமுறைப்படி பிரதிமாதந்தோறும் வரும் பௌர்ணமி திதியில் சுமங்கலிகள் திருவிளக்குப் பூசையை பூஜித்து அதன் பெருமையை பேணுகின்றோம். இத்தாலியின் நன்முத்திரையானது காணும் ஆடவர்களைக் காமமுறாவண்ணம் அவர்களது எண்ணங்களை நல்லவைகளாக எண்ண செய்வதோடு, மாற்றானைக் கண்டு அவர்கள்பால் தம் மனதை லயிக்கச் செய்யும் மங்கையரின் மடமையையும் மாளச் செய்கிறது. இவ்வளவு பெருமை பொருந்திய திருத்தாலியினை அணிந்து நல்வாழ்விற்கு செழுமை பெற இதன் புனிதத் தன்மைக்கு இழிவேற்படாமல் பெண்மைக்கு பெருமையினைச் சேர்க்கும் "மங்கள மனை

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# துன்பங்களுக்கு விமோசனம் முன்னோரின் அருள்வாக்கு

இலங்கை வாழ் தமிழ் மக்களாகிய நாம் சில வருடங்களாகப் பல இன்னல்களுக்கு ஆளாகி எமது சில உற்றார்களையும் உறவினர்களையும் விடுகளையும் இழந்து மிகச் சிரமப்பட்டு சேகரித்த பொருள் பண்டங்கள், ஆடுமாடுகளையும் பறிகொடுத்து துன்ப சாகரத்தில் நிற்கின்றோம்.

இவ்வேளையில் எமது பெருமை வாய்ந்த முன்னோர் கூறியிருக்கும் அமுதவாக்குகளை நினைவு கூர்ந்து மனநிம்மதியை பெறுவதல்லாமல் வேறு விமோசனமில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற பெரியார் யோகர் சுவாமிகளிடம் பல மனிதர் தங்களைப் பீடித்திருக்கும் துயரமான செய்திகளைக் கூறி மனச்சாந்தி அடைவார்கள். அவர் சிலருக்கு ''இவையெல்லாம் எப்பவோ முடிந்த காரியமென்றும்'' வேறு சிலருக்கு ''நான் செத்தால் நீ நல்லாயிருப்பாயென்றும்'' சொல்வது வழக்கம். நான் என்பது ஆணவத்தைக் குறிக்கும்.

நாம் இவ்வுலகில் அழியும் அநித்தியமான உருவங்களோடு சொற்பகாலம் வாழ்ந்து நாமும் அழிந்து போகும் தன்மையுடையவர்கள். எம்மைப் படைத்து காத்து எமக்குள் இயங்கும் ஆத்மாவே நித்திய மெய்ப் பொருள். இந்த ஒரு பொருளே எங்கும் பற்பல தோற்றங்கள், உருவங்கள், வடிவங்களெடுத்துப் பரமாத்மாவாய் சிவமாய் அளவளாவி நிற்கின்றது. அப்பொருளை அறிந்து உணர்ந்தவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை இன்பமாக அமையும். யோகர் சுவாமிகள் நற்சிந்தனையில் கூறும் பாடல் பின்வருமாறு:

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லையென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால்
தென்னை பனைசேர் இலங்கை வாழும் சிவ
நேயச் செல்வர்காள் தேரீர் இச் சிவன் சிவம்!

**சி. இராமநாதன், திருமூலர் சங்கம்**

திருமந்திரத்தை அருளிச்செய்த திருமூலரையே முன்னைப் பெரியோரென்று குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கவும். பின்வரும் திருமந்திரம் விளக்குவது

தன்னை அறியத் தனக்கு ஒரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே!


தன்னையென்பது தனக்குள் இயங்கும் மெய்ப் பொருளான ஆத்மாவென்பது பொருள். ஆத்ம சொருபத்தை அறியும் அறிவை குரு உபதேசம் மூலமாகவே அறியலாம்.

ஆத்ம சக்கரத்தில் ஐந்தெழுத்தில் இயங்கும் அப்பொருள் அன்பையும் அறிவையும் அதோடு சேர்ந்து நிற்பவர்களுக்கு கொடுக்கும். எமது முற்பிறப்புகளையும் ஊழ்வினைகளையும் அது அறிந்து நிற்கும்.

அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்
இன்பமும் இன்பக் கல்வியுமாய் நிற்கும்
முன்புறு காலமும் ஊழியுமாய் நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்து நின்றானே!

எமது விதி நாம் செய்த வினைப்பயனால் நிருபிக்கப்பட்டது. ஆகாசத்திலிருந்து ஒருவரும் எம்மை துயரத்துள் மாட்டவில்லை. எம்மை படைத்து காத்து அழிக்கும் தலைவனே ஆத்மா. அவனோடு இணைந்து ஐந்தெழுத்துக் குறிவழியே உச்சிக்குச் சென்று வந்தபடியால் இவ்வுலகம் நல்ல நிலமாய்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)



சைவமுன்னேற்றச் சங்கத்தின் லண்டன் கிளையில் கட்டடத் திட்ட பொதுக்கூட்டம் லண்டன் ஈஸ்ட் ஹாம் சஸெக்ஸ் ரோட்டிலுள்ள லேங்டோன் பாடசாலையில் நடைபெற்றபோது முருக பக்தர் பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டபோது எடுத்தபடம். சங்க நிர்வாகிகளுடன் நமது ஆசிரியர் திரு. ஏ. எம். துரைசாமியும் காணப் படுகின்றார்.

# ஸ்ரீ காயத்ரீ மந்திர மகிமை

ஆர். கே. முருகேசு சுவாமிகளின்

## ஸ்ரீகாயத்ரீ மந்திர மகிமை



### நூல் அறிமுகம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
ப்ர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஹ ப்ரசோதயாத்

எத்தனையோ விதமான மந்திரங்கள் இன்று பரவலாக ஜெபிக்கப்படுகின்றன. ஆயினும் அம்மந்திரங்கள் அனைத்திலும் சக்தி வாய்ந்ததும்; இருக்கு, யசூர், சாமம், அதர்வம் ஆகிய நான்கு வேதங்களினதும் தாயாக மகிமை பொருந்தியதும் ''சாயத்ரீ'' எனும் மந்திரமாகும். காயத்ரீ மந்திரத்தை ஜெபிக்கும்போது மனிதன் சூரியனைப் போன்று பிரகாசமடைவதாக வேதங்கள் கூறுகின்றன.

அந்தளவு மகிமை பொருந்திய 'காயத்ரீ' மந்திரத்தைப்பற்றி காயத்ரி சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள் ''ஸ்ரீ காயத்ரீ மந்திர மகிமை'' எனும் நூலில் மிகவும் விரிவாகவும் விளங்கக்கூடியதாகவும் எழுதியுள்ளார்.

இன்று 'மந்திரங்கள்' என்று கூறிக்கொண்டு ஒரு சிலர் சமூகத்தை ஏமாற்றிக்கொண்டும், சுரண்டியும் வாழ்ந்துகொண்டிருப்பதை யாவரும் அறிவார்கள். இப்படியான காலகட்டத்தில் சகல வல்லமையும், சர்வசக்தியும் படைத்த 'காயத்ரீ' மந்திரத்தை ஒரு கயவன் அறிய நேர்ந்தால் சமூகத்தையே நாசமாக்கிவிடுவான், நாட்டையே சின்னாபின்னமாக்கிவிடுவான். இதன் காரணத்தால்தான் 'காயத்ரீ' சாதனைகள் யாவும் மறைக்கப்பட்டு தகுந்தவர்களுக்கு, நல்ல சிந்தனையுடையவர்களுக்கு மாத்திரம் நேர்முகமாகவும், மானசீகமாகவும் கற்பிக்கப்பட்டு வந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நா. ஹரிதாஸ்

காயத்ரீ மந்திரத்திற்கு இந்தளவு மகத்தான சக்தி உள்ளதா?—நம்பமுடியுமா?

''ஸ்ரீ காயத்ரீ மந்திர மகிமை'' நூலை படியுங்கள், தொடர்ந்து படிக்கும்போதுதான் அதன் மகத்துவத்தை உணரமுடிகிறது—அறியமுடிகிறது.

காயத்ரீ மந்திரததை முறைப்படி ஜெபிப்பதால் பலருக்கு இன்னல்கள் நீங்கி நல்வாழ்வு கிட்டியுள்ளது. திருமணமாகாமல் வருடக்கணக்காக இருந்த பல கன்னிப் பெண்கள் காயத்ரீ உபாசனை செய்ததால் அவர்களுக்குத் திருமணமாகி இல்லறவாழ்வை இனிதே நடத்தி வருகின்றார்கள். காயத்ரீ மந்திரத்தின் மகிமை கீழை நாடுகளில் மாத்திரமல்லாது இன்று மேலை நாடுகளுக்கும் பரவியுள்ளது. மேல் நாடுகளில் உள்ள பலர் முருகேசு சுவாமிகளிடம் வந்து முறைப்படி தீக்ஷை பெற்று 'காயத்ரீ' மந்திர மகிமையால் பல நன்மைகளைப் பெற்றுள்ளதாக அவர்களே மனந்திறந்து கூறுகிறார்கள்.

'காயத்ரீ மற்ற தெய்வங்களைப்போல் பரலோகத்தில் இருப்பவள் அல்ல. காயத்ரீ மந்திரம் மற்ற மந்திரங்களைப்போல் தனியொரு சக்தியை விழிப்பதுமல்ல. மண்ணுலகுக்கு அனைத்தையும் அளித்து காத்து வருகின்றது.

காயத்ரீ உபாசனையால் சகல சித்திகளும் உண்டாகின்றன. ஏனெனில் பிரம்மா விஷ்ணு இவர்களின் ஆத்மாவாக இருப்பவள் காயத்ரீ ஆகும்.

காயத்ரீ சாதனையால் பெறப்படும் நன்மைகளாவன; செல்வம் ஆரோக்கியம், ஆயுள், புத்திரப் பேறு, நல்ல விவாகம், வியாபார விருத்தி, உத்தியோக உயர்வு, உடல் வலிமை, மனவலிமை சொத்து, வீடு முதலான பௌதிக சுகங்களும், கல

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# சோதிடக் கலை

## உங்கள் கேள்விகளுக்கான தில்லையின் பதில்கள்

இந்து கலாசாரம் இதழில் வரும் கூப்பனை பூர்த்திசெய்து ஒருவர் இரண்டு கேள்விகளுக்கு மேற்படாமல் அனுப்பினால் 'தில்லை' உங்களுக்கு தகுந்த பதில்களை அளிப்பார்.

இந்து கலாசார சோதிடப் பகுதி

பெயர்:........................................................

பிறந்த வருடம்.........மாதம்.........திகதி.........

நேரம்.......................நட்சத்திரம்................

கேள்வி:......................................................

..................................................................

..................................................................

..........................

கையொப்பம்

மேற்கண்ட கூப்பனை வெட்டி ஒரு போஸ்ட்கார்டில் ஒட்டி அனுப்ப வேண்டும். கூப்பன் இல்லாத கார்டுகள் கவனிக்கப்பட மாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி:-

சோதிடப் பகுதி
இந்து கலாசாரம்
39/23, நெல்சன் ஒழுங்கை
கொழும்பு-3.

1. எஸ். கே. ராஜரெத்தினம் உணுகல.

கே. பிறந்த வருடம் 07-05-1958ஆம் ஆண்டு மூல நட்சத்திரத்தில் பிறந்த எனக்கு காதல் திருமண வாழ்வு எப்படி அமையும் பெற்றோரின் ஆதரவு கிடைத்திடுமா?

ப உங்கள் நட்சத்திரப்படி ஏழரைச்சனி கடக்கூறு ஆரம்பமாகின்றது காதல் திருமணம் நடந்தேறும் ஆரம்பத்தில் பெற்றோர் எதிர்ப்புடன் முடிந்தாலும் 1991ம் ஆண்டின் ஆடியின் பின் எல்லாம் சிறப்பாக அமையும்.

2. எஸ். பி. மோகன் சாமிமலே,

கே. 1967ம் ஆண்டு மூல நட்சத்திரத்தில் பிறந்த எனக்கு கிரகபலன் முன்னேற்றங்கள் எப்படி நான் இப்போது செய்யும் தொழில் நிலைத்திடுமா.

ப. உங்களுக்கு ஏழரைச்சனி நடப்பதாலும் வியாழன் அட்டமத்தில் இருப்பதாலும். தற்போது செய்யும் தொழில் நிலைக்க இடமல்லை 1991ம் ஆண்டு ஆடி 18 இன்பின் கிடைக்கும் தொழிலே சிறந்ததாகவும் நிரந்தரமாகவும் அமையும்.

3 வி. மகேஸ்வரி

கே. 1972-6-23ல் உத்தராடம் நட்சத்திரத்தில் பிறந்த நான் கல்வியில் முன்னேற்றம் அடைவேனா என் எதிர்கால வாழ்க்கை எப்படி அமையும்.

ப. மகரம் இராசியில் பிறந்த உங்களுக்கு ஏழரை சனி காலமானாலும் பாதிப்பு இல்லை வியாழ சுகம் உண்டு உயர்ந்த கல்வியுடன் சிறந்த வாழ்க்கை அமையும்.

4. வி. பாலாபிஷேகம் கோட்டைக்கல்லாறு, கல்லாறு கி. மா.

கே 25 வருடங்களாக தனியாரிடத்தில் தொழில் புரிகின்றேன் அத்தொழில் உயர்வடையுமா அல்லது வேறு முன்னேற்றங்கள் உண்டா?

ப. பூராடம் நட்சத்திரத்தில் பிறந்த உங்களுக்கு 1991ம் ஆண்டு மாற்றத்தைக் கொடுக்கும், தற்போதய தொழில் மாறி, வேறு பாதைக்கு உங்கள் தொழில்பாதை அமையும்.

5. எஸ் மலர் தெகிவளை,

கே. திருவோணம் நட்சத்திரத்தில் 1970ம் ஆண்டு பிறந்த எனது எதிர்காலம் எப்படி.

ப. உங்களுக்கு ஏழரைச்சனி நடப்பதால் கல்வியில் குழப்பமேற்பட்டு 22 வயதுக்குள் திருமணப்பலன் உண்டு.

6 கே. சேகர் மட்டக்களப்பு

கே. புனர்பூசம் நட்சத்திரத்தில் 1957ம் ஆண்டு பிறந்த எனக்கு விடிவுகாலம் உண்டா?

ப. உங்களுக்கு ஜென்மத்தில் வியாழன் இருப்பது பலவித தொல்லைகளை தந்தாலும் 1991ம் ஆண்டு மாசி 18இல் இருந்து விடிவு காலமாக அமைவு பெறும்.

7. ஆர். உதயா கொழும்பு-4.

கே. சுவாதி நட்சத்திரம் 1960ம் ஆண்டு பிறந்த எனது வாழ்க்கை எப்படி அமையும்?

ப. வியாழன் 10ம் வீட்டில் இருப்பது இடமாற்றம் வெளிநாட்டு வாழ்க்கை திருமணம் என்பனகிட்டும் 1991ம் ஆண்டு சனியின் பின்பு மிக நன்று.

8. எஸ், கனகநாயகம் புத்தளம்.

கே. அஸ்வினி நட்சத்திரம் 1955ம் ஆண்டு பிறந்த

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

சர்வதேச இந்து இளைஞர் அமைப்பு அண்மையில் நடத்திய

# கருத்தரங்கின் தொகுப்பு!

சர்வதேச இந்து இளைஞர் அமைப்பு அண்மையில் இரு நாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இதனை தெற்காசிய இந்து இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டாளர் குமரகுருபரனும் முகுந்தனும் ஏற்பாடு செய்திருந்தார்கள். கருத்தரங்கில் 40க்கும் மேற்பட்ட இந்து மன்றங்கள் கலந்து கொண்டன.

● ●

''நோன்பு பெருநாளின்போது பேரிட்சம் பழத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது உடனே முஸ்லிம் கலாச்சார அமைச்சர் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்தார் பேரீச்சம்பழம் இறக்குமதி செய்யப்பட்டது. நோன்புப் பெருநாளும் திருப்தியாகக் கொண்டாடப்பட்டது ஆனல் அண்மையில் நடைபெற்ற நவராத்திரி விழாவுக்கு அவலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது விலேயோ நெருப்பு விலை. அந்த விடயத்தை சுட்டிக்காட்டி பாராளுமன்றத்தில் பேச எவரும் இருக்கவில்லை. நாம் நாதியற்றுப் போனோம்''.

இவ்வாறு குரு பிரவேச அமைப்பாளர் மணி ஸ்ரீநிவாச சர்மாவும் தமிழ் கலாசார மன்ற கு. குருசுவாமி ஆகியோர் ஒரே கருத்தை வெளியிட்டனர்.

● ●

இந்து கலாசார பத்திரிகையின் ஆசிரியர் திரு. வைத்தமாநிதி கூறியதாவது:

நமக்கு யார் பீடாதிபதி? மற்ற மதங்களுக்கு தலைமை குரு இருப்பார். ஆனால் நமக்கு ஒருவர் இல்லை என்பது பெருங்குறையாகவே உள்ளது. இதனால் நல்லூர் பீடாதிபதியை நாம் சிறப்பிக்க வேண்டும்.

● ●

திருகோணமலை இந்து இளைஞர் பேரவை செயலாளர் செ. சிவபாதசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:

தலைநகரில் இந்து அமைப்புகள் மிக மிக மந்தகதியிலேயே செயல்படுகின்றன. திருகோணமலையில் கோயில்கள் ''புல்டோசர்'' மூலம் தகர்க்கப்பட்டன. இச்செய்திகள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

அண்மைக் கால போர் நடவடிக்கையினால் பல குழந்தைகள் பெற்றோரை இழந்துள்ளன. அதில் 85 குழந்தைகளை நாம் பொறுப்பேற்று பராமரித்து வருகிறோம்.

கந்தளாயில் 25 ஏக்கர் நெல்வயலும் ஒரு பெரிய கட்டிடமும் இராமகிருஷ்ண மடத்திற்கு ஒரு செட்டியாரால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. அதனை இராமகிருஷ்ண மடம் பொறுப்பேற்கவில்லை.

திருகோணமலையில் இந்துக்களின் காணிகளில் குடியேற்றங்கள் நடக்கின்றன. கோணேஸ்வர ஆலயம் பல ஆண்டுகளாக மூடப்பட்டு கிடக்கின்றது.

● ●

கருத்தரங்கு அமைப்பாளர் முகுந்தன் பேசுகையில். அமைச்சில் 45 இந்து மன்றங்கள் பதியப்பட்டுள்ளன. அவற்றிற்கு அழைப்பு அனுப்பினோம். பல அழைப்புகள் திரும்பி வந்துவிட்டன அவ்வாறான சங்கம் ஒன்று இல்லை என எமக்கு அறிவிக்கப்படுகிறது என்றார்.

● ●

விவேகானந்தா மகாவித்தியாலய அதிபர் மாணிக்கவாசகர் பேசுகையில் இளைஞர்களால் சமய பணியும் செய்ய முடியும். புத்தர் இயேசு போன்ற மகான்கள் இளைஞர்களாக இருக்கும்போதே ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டனர்.

● ●

ஆசிரியர் சந்திரசேகரம் பேசுகையில் துணிவு இருப்பின் வெற்றி காணலாம் விவேகானந்தரும் துறவிதான். ஆனால் முட்ட வந்த மாட்டை கொம்பில் பிடித்து நிறுத்தினார் துணிவிருந்தால் ஆன்மீக வழியில் நிறைய சாதிக்கலாம் என்றார்.

● ●

இலங்கை விஸ்வ இந்து பரிசத் செயலாளர் பேசுகையில் இன்று நாட்டில் அகதிகள் அதிகரிக்கிறார்கள் பல உயிர்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது இந்தநேரத்தில்தான் ஆன்மீக துறையினரின் சமூக சேவை அத்தியாவசியப்படுகிறது என்றார்.

● ●

அகில இலங்கை இந்து மாமன்ற நீலகண்டர் பேசுகையில் கூறியதாவது:

இளைஞர்களின் ஆன்மீக துடிப்பை காண்கையில், ஒரு நம்பிக்கை ஒளி தென்படுகிறது செய்ய

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## சர்வதேச இந்து இளைஞர் அமைப்பு . . .

(10ம் பக்க தொடர்ச்சி)

வேண்டிய சேவைகள் நிறைய இருக்கின்றன. சமுதாயம் உங்கள் சேவைக்காக காத்துக் கிடக்கின்றது

விவேகானந்த சபைத்தலைவர் வேலாயுதம் பிள்ளை பேசுகையில்: இன்று மதமாற்றமும் இன மாற்றமும் நடந்து வருகிறது என்றார்.

மாணிக்க இடைக்காடர் பேசுகையில் கூறியதாவது:

சமயப்பணிமூலம் சமுதாயம் பயன்பெறவேண்டும் விவேகானந்தர் வெறும் சமயப்பணி மாத்திரம் செய்யவில்லை சமுதாய நலன் கருதியே தனது சமய பணிகளைச்செய்தார் விவேகானந்தச் சபைச் செயலாளர் ராஜ புவனேஸ்வரன் பேசுகையில் நமக்கு என தலைமைக்குரு ஒருவர் இல்லை.

உலகில் 80 கோடி இந்துக்கள் உள்ளனர். நாம் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும்.

சர்வதேச இந்து இளைஞர் அமைப்பின் தெற்காசிய அமைப்பாளர் குமர குருபரன் பேசுகையில் நமது இந்து மன்றங்கள் சமூகத்திற்காக இதுவரை எதை சாதித்தன? மதமாற்றத்தைத் தடுக்க என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்? சமய பணி, அகதிகள் நிவாரணப் பணியாற்றுவோரும் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களின் உண்மை நியாயத்தை எடுத்துக்காட்ட எந்த இந்து மன்றம் முன் வந்ததென்று கேள்வி எழுப்பினார்.

முத்துக்கிருஷ்ண சுவாமிகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த அச்சயன் பேசுகையில், நாங்கள் கொழும்பில் மருத்துவமனை ஒன்றை கட்டி வருகிறோம். இந்து சமுதாயத்திற்கு அது ஒரு பெரிய ஆறுதலாக அமையும். என்றார்.

சுற்றுலா அமைச்சைச் சேர்ந்த நாகலிங்கம் பேசுகையில், இந்து சமயம் ஒரு சுதந்திரமான சமயம். இதுவரை யாரும் மக்கள் மத்தியில் சென்று சமயப் பணி செய்யவில்லை. அதனால் நம் மக்களுக்கு நம் சமயத்தைப்பற்றியே தெரியாமல் போய்விட்டது.

கொஸ்லாந்தை இந்து இளைஞர் முன்னேற்ற மன்றத்தைச் சேர்ந்த வி. எஸ். பாலா கூறியதாவது:

மலைநாட்டில் உள்ள வறுமையைப் பயன்படுத்தி இந்துக்கள் மதம் மாற்றப்படுகின்றனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த தம்பிராஜா ஈஸ்வரராஜா கூறியதாவது:

இந்து சமூக பொருளாதார அமைப்பு ஒன்று நமக்குத் தேவை. நமது மக்கள் ஆபத்தில் சிக்கி இருக்கும் வேளையில் நிவாரண உதவிகளை செய்ய அது உதவியாக இருக்கும்.

இப்போது நமது சமுதாயத்தில் பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 'அநாதை இல்லம்' என்ற பெயரில், நிறுவனங்கள் ஆக்காமல் இந்து சிறுவர் கிராமங்கள், நிலையங்கள் என்று ஆரம்பிக்க வேண்டும். ...

ஓம் சக்தி இயக்கத்தைச் சேர்ந்த எம். சுரேஸ் பேசுகையில், இந்துக்கள் இந்து சடங்குகளைப் பின்பற்றியே திருமணங்கள் முடிக்க வேண்டும்.

பொகவந்தலாவ டாக்டர் நல்லசேகரன் பிள்ளை பேசுகையில், இந்து மத தத்துவங்களை மக்கள் மத்தியில் பரப்ப பிரசாரகர்களை நியமிக்க வேண்டும்.

தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் பேசுகையில் அர்ச்சகர் பலர் இப்போது கோவிலை வைத்து வியாபாரம் செய்ய புறப்பட்டு விட்டார்கள். அர்ச்சகருக்கு நல்ல பயிற்சி வழங்க வேண்டும்.

காப்புறுதி கூட்டுத்தாபன பிரசாரகர் கோபால் சங்கர் கூறியதாவது:

இந்துக்கள் தன் சமய காரியங்களை செய்யத் தானும் இன்று முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இந்து தர்மத்தை சரியாக எடுத்துக் காட்ட ஒரு மறைநூல் நமக்கு இல்லை இந்து பெண்கள் தலைநகரில் தங்க ஒரு இந்து விடுதி கிடையாது.

இளைப்பாறிய போது சேவகர் வன்னியசிங்கம் பேசுகையில் மதமாற்றத்தைத் தடுக்க இந்துக்கள் மத்தியில் சமயத்தைப் பற்றி நிறைய விளக்க வேண்டியுள்ளது என்றார்.

# ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமணிய ஆச்சிரமம் ஸ்தாபகர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு கொழும்பு இந்து கலாசார மன்றம் ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் வைத்து மலர் மாலை அணிவித்து பாதபூஜை செய்தனர்.

இவ்வைபவத்தில் மன்றத் தலைவர் திரு ஆர். வைத்தமாநிதி பொதுச் செயலாளர் திரு. ஏ. எம். துரைசாமி மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

---

சோதிடக் கலை . . .

(9ம் பக்க தொடர்ச்சி)

எனது காலம் எப்படி?

ப. 35 வயதை தாண்டிவிட்ட உங்களுக்கு இனிமேல் சுபீட்சமான காலம், பலவித நன்மைகளை அடைவீர்கள்.

9. ந. தயாளன் கொழும்பு-13.
கே 1955-4-10ம் திகதி விசாகம் நட்சத்திரத்தில் பிறந்த எனக்கு துன்ப நிலை மாறுமா?

ப துன்பத்தின் கடைசிக் கட்டத்தில் இருந்து விடுபட்ட உங்களுக்கு படிப்படியான நன்மைகள் உண்டு 1991ம் ஆண்டில் இருந்து ஓரளவு நிம்மதி தோன்றும்

ஆர், ஆனந்தகுமார் கொழும்பு-14
கே. 1949ம் ஆண்டு விசாகம் நட்சத்திரத்தில் பிறந்த எனக்கு நல்ல காலம் எப்போது?

ப. சகடயோகப் பலன் கொண்ட உங்களுக்கு 1991 ஆண்டு வைகாசி 28இன் மேல் நல்லகாலமாகும் அதுவரை மத்திமபலனுக வாழ்க்கை அமையும்.

11. கே. மலர்விழி பண்டாரவளை,

கே. திலீயாரே சோதிடம் என்பது உண்மையா! அப்படியானல் நான் 1969ம் ஆண்டு உத்தரம் நட்சத்திரத்தில் பிறந்தேன் எப்படி வாழ்க்கை அமையும்

ப. மலர்விழியாரே சோதிடம் உண்மையானதே ஏன் சந்தேகம் உங்களுக்கு உங்கள் வாழ்வின் எதிர்காலம் ஒரு பொற்காலம் எனலாம்.

மிருகத்தின் உருவத்தில் இறைவனை

# வழிபடுவது ஏன்?

இறைவனை நாம் மிருகத்தின் உருவத்திலும் தரிசித்து வழிபடுவது ஏன்? கணபதி, நரசிம்மர் போன்ற தெய்வ உருவங்களில் மிருகங்களின் தலையை நாம் காண்பது ஏன் என்பதற்கு சுவாமி நாராயணானந்த பாரதி தரும் விளக்கம்:

மனிதன் ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு விதத்தில் மிருகமாகவே இருக்கிறான். மிருகத்தனமான உணர்ச்சிகள் அவனை ஆட்டிப்படைக்கின்றன. அந்நிலையை வென்று அந்த உணர்ச்சியை அடக்கக்கூடிய சக்தி தனக்கு இருக்கிறது என்பதையே பகவான் இந்த சொரூபத்தில் நமக்குக் காட்டுகிறார், தான் படைத்த எல்லா உயிரிலும் தான் இருப்பதாக சுவாமி ஞாமசமூட்டுவதாகவும் கொள்ளலாம், மனிதனை ஆட்டிப் படைக்கக்கூடிய மிருக உணர்வுகளை அவன் வென்று நிற்க வேண்டும் என்று காட்டவே, மிருகங்களை வாகனமாகக் கொண்டு அவற்றின் மேலேறி அமர்ந்து காட்சி தருவதன்மூலம் சுவாமி உணர்த்துகின்றார். மிருகங்களிடமும் பகவான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டதனாலேயே, நாமும் இறைவன் உருவத்தோடு வாகனங்களையும் சேர்த்து வணங்குகிறோம்.

# எமது பிரார்த்தனை

கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கத் தலைவரும் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் இராஜகோபுர சபையின் நிர்வாகத் தலைவரும் எயர் லங்கா விமான சபையின் டைரக்டர்களில் ஒருவருமான திரு எஸ். தனபாலா அவர்கள் திடீரென நோய் வாய்ப்பட்டிருப்பதைக் குறித்து இந்து கலாசாரம் வருந்துகிறது.

அடுத்த ஆண்டு இராஜ கோபுர வேலைகள் முற்றுப்பெற்று, மகாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால், திரு தனபாலா அவர்களுக்கு பாரிய பொறுப்புக்கள் உண்டு. இவ்வேளையில் எல்லாம் வல்ல முருகப்பெருமான் திரு தனபாலா அவர்களுக்கு பூரண சுகத்தை அளித்து அவரது பணியை தொடர அருள்புரிய வேண்டுமென இந்து கலாசாரம் பிரார்த்தனை செய்கின்றது.

# தாய்ப் பாலூட்டும் தாய்க்குலமே!

தாய்ப் பாலூட்டும் தாய்மார்களே!
தாழ்மையான வேண்டுகோள் ஒன்று!
மூடியசேலையில் பால்கொடுக்கும் நீங்கள்
முழுவதும் அறிந்திருப்பதும் முக்கியம்.
உயிர்ச்சத்துக்கள் என்பதோ உண்மையாகவே
உங்களுக்குத்தான் தேவை!

கனிப்பொருள்களோ உங்களுக்குக்
கட்டாயமாகத் தேவை
'என்புருக்கி' நோயை — உங்கள் மழலையை
எள்ளளவும் எட்ட விட்டுவிடாதீர்கள்!
'குவாறியோகர்' நோய்க்கு — உங்கள்
குழந்தையை பலியாக்கி விட்டு

குழி தோண்டிப் புதைக்காதீர்கள்.
ஊன் உறக்கத்திடம் — நீங்களோ
உட்புகுந்து விட்டால் — உங்கள் மழலை
உற்சாகமின்றியேதான் வளரும்!
தேவையற்ற கவலைகளை விட்டுவிட்டு — நீங்கள்
தெளிவான சிந்தனையுடன் பாலூட்டுங்கள்.

படுத்துக்கொண்டே பால் கொடுப்பதையும்—நீங்கள்
பழக்கமாக்கிக் கொள்ளாதீர்கள்!
விலை மதிப்பில்லாத தாய்ப்பாலை — நீங்கள்
விளையாட்டாகக் கொள்ளாமல்
வெற்றியாகக் கொள்ளுங்கள்!
தாய்மை என்பதற்கு — இந்த

தரணியே அடிமை — எனவேதான் நீங்கள்
கூச்சப்பட்டுக்கொண்டே பாலூட்டாமல்,
குலப் பெருமையோடு ஊட்டுங்கள்.
தாலாட்டில் தமிழை ஊட்டுங்கள் — அதனால்
தரணியெலாம் தங்கள் மழலை
தமிழ் மணம் பரப்பட்டும்.

கனக சாந்தி

## ஸ்ரீ காயத்ரீ மந்திர மகிமை

(8ம் பக்க தொடர்ச்சி)

கங்கள், கிரகபீடைகள், தோஷங்கள், கர்மப்பிரபாவங்கள், செய்வினைகள், நோய்கள், குடும்ப சச்சரவுகள் முதலியன விலகல் ஆகியனவாம்.

'காயத்ரீ'யைப்பற்றி மகாத்மா காந்தி கூறுவது காயத்ரீ மந்திரத்தின் ஜபம் நோயாளிகளைக் குணப்படுத்தும். ஆத்மாவை முன்னேறச் செய்யவும் பயன்படுகிறது. திடசித்தமாக செய்யப்படும் காயத்ரீ ஜெபம் ஆபத்துகளை காப்பாற்றும் திறமை பெறும்.

24 எழுத்துக்களைக்கொண்ட காயத்ரீ மந்திரம் தனித்தனியாய் உச்சரிக்கப்படும்போது 24 வகையான தெய்வசக்திகள் விழிப்படைகின்றன. இந்த 24 தெய்வ சக்திகளைப்பற்றியும், எழுத்துக்களின் அடிப்படைத் தத்துவங்களைப்பற்றியும் மிகவும் துள்ளியமாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தெய்வாம்சங்கள் பல உள்ளடக்கிய இந்நூல் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய ஒரு பயனுள்ள அரிய நூலாகும்.

நாட்டின் இன்றைய இக்கட்டான நிலைமைகளிலிருந்து மீட்சி பெற, பிரச்சினைகளின்றி அமைதியான வாழ்வு வாழ 'காயத்ரீ' மனிதனை செம்மையாக வழிநடத்தும்.

'ஸ்ரீ காயத்ரீ மந்திர மகிமை' நூலை ஒவ்வொருவரும் வாசித்து 'காயத்ரீ' தேவியின் அருட்கடாட்சம் பெற்று சுகவாழ்வு வாழ்வீர்களாக.



சைவமுன்னேற்றச்சங்கம் லண்டன் கிளையினர் ஈஸ்ட்ஹேம் நகரில் நடத்தும் ஞாயிறு சமய பாடசாலைக்கு நமது ஆசிரியர் விஜயம் செய்து வகுப்புகள் நடைபெறுவதை அவதானித்துக்கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

# நல்வாழ்வுக்குச் சில

கோவில்கள், ஆலயங்கள் புனிதமான இடமாகும். எனவே அங்கு செல்லும் பக்தர்கள் குளிக்காமலும், கைகால் கழுவாமலும், திருச்சின்னம் அணியாமலும் போகக் கூடாது. அங்க வஸ்திரத்தை மேலே போர்த்திக் கொண்டு செல்லுதல் பாதரஷை அணிந்து கொண்டு செல்லுதல், மூக்கு நீர் சிந்துதல், தலை சீவுதல் ஆகிய காரியங்களை கோவிலினுள் செல்பவர்கள் தவிர்க்க வேண்டும்.

சோம்பலும், சபலபுத்தியும், அதைரியமும், மோகமும், கெட்ட நண்பர்களும், முரண்டு, பிடிவாதமும் கல்வி கற்பவனுக்கு தடங்கலான தோஷமாகும்.

வீட்டிலுள்ள பூஜை அறையில் நமக்கு வேண்டிய தெய்வ படங்களைத் தரிசித்து வணங்கும் போது மறைந்த மூதாதையர் படமோ, பெற்றோர் படமோ வைத்து வணங்குவது பல மடங்கு பலன் தரவழி வகுக்கும். இவர்கள் உயிரோடு இருந்து பின் தெய்வத்தோடு இரண்டாகக் கலந்து ஆவிஸ்வரூபமாக இருந்து உதவுபவர்கள் ஆவார்கள், இவர்களுக்குப் பூஜை அறையில் முக்கியத்துவம் கொடுப்பதால் நினைத்த காரியம் தடங்கலின்றி நடக்கவும் வசதி பெறவும் வழி வகுக்கும்.

பிறர் கஷ்டத்தை அறிந்து அதைப் போக்க உதவி செய்கின்றவன் தண்ணீரில் தத்தளிக்கும் ஒருவனைக் காப்பாற்றுபவன், கர்ப்ப ஸ்திரீகளை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல வாகன வசதி செய்பவன், கடன் தொல்லையால் கஷ்டப்படுகிறவனுக்கு ஆறுதல் சொல்பவன், மழையில் நனைந்தவனுக்கு வஸ்திரம் கொடுப்பவன் ஆகிய இவர்கள் நற்பலனை அடைவார்கள்.

தொகுப்பு - கா. சின்னையா



சைவமுன்னேற்றச் சங்கம் லண்டன் கிளையின் 13வது ஆண்டுவிழா ஈஸ்ட்ஹோம் லேங்டன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றபோது சங்க ஞாயிறு சமய பாடசாலை மாணவ மாணவியர் ''பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்'' என்ற பக்தி நாடகத்தை மிக அற்புதமாக நடித்தனர். (விமர்சனம் அடுத்த இதழில்)

## துன்பங்களுக்கு விமோசனம் . . .

(7ம் பக்க தொடர்ச்சி)

இன்பமாய் அமைந்திருக்கின்றது என்று பின்வரும் திருமந்திரம் விபரிக்கின்றது.

தான் முன்னம் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னம் செய்தங்கு வைத்தோர் மாட்டில்லை
கோன்முன்னம் சென்னி குறிவழியே சென்று
நான் முன்னம் செய்ததே நன்னிலமாவதே!

நாம் முன்னம் செய்த வினைகளே எமக்கு பகைவனாகவும் நண்பனாகவும் உலக வாழ்க்கையில் தோன்றுகின்றன. பின்வரும் திருமந்திரத்தைப் பாருங்கள்.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு இம்மையும் மறுமையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனுமாமே!

ஆத்மன் என்னும் சமஸ்கிரதச் சொல்லுக்கு உபநிடதத்தில் உடம்புள் இயங்கும் இறைவனென்று பொருள். திருமந்திரமும்;

சிவனென்ன சிவனென்ன வேறில்லை
சிவனார் சிவனாரை அறிகிலர்
சிவனார் சிவனாரை அறிந்தபின்
சிவனார் சிவனாயிட்டிருப்பரே!

என்று கூறுகின்ற திருமூலர் தமிழ் சமுதாயத்துக்கு அளித்த சைவசித்தாந்த கொள்கைகளைப் பின்பற்றி வாழ்க்கையில் சாந்தி அடைவோமாக!

எனது பாடசாலையின் குறைபாடுகள்

# தீர்க்கப்படமாட்டாதா?

குருணாகல் மாவட்டத்திலுள்ள மூவான்கந்தை சரஸ்வதி தமிழ் வித்தியாலயம் ஆகிய நான் பயிலும் பாடசாலையானது சுமார் நாற்பது வருடங்கள் பழமைவாய்ந்ததாகும் இப்பாடசாலை மாவத்தகம தேர்தல்தொகுதிக்கே இந்து மாணவர்கள் பயிலும் ஒரே பாடசாலையாகும். மூவான்கந்தை, பிட்டிய கந்தை, மொறத்தென்னை போன்ற தோட்டப்புறங்களிலுள்ள தமிழ் மாணவர்கள் பயிலக்கூடிய ஒரே ஒரு பாடசாலையாகவும், குருணாகல் மாவட்டத்திற்கே இரண்டாவது இந்து பாடசாலையாகவும் இது திகழ்கின்றது.

ஆயினும் எனது பாடசாலையில் விஞ்ஞானம் கணிதம் போன்ற பாடங்களை பயிற்றுவிப்பதற்கு வருடக்கணக்காக ஆசிரியர்கள் எவரேனும் நியமிக்கப்படவிலலை. இதனால் மலையக மாணவர்களாகிய எங்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. பரீட்சைகளிலும் சித்தியெய்த முடியாத பரிதாப நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுவிட்டோம்.

மேலும், எமது பாடசாலைக்கு இதுவரையும் தண்ணீர் வசதி செய்து தரப்படவில்லை. இதனால் மாணவர்களாகிய நாங்களே சுமார் 200 யார் தொலைவிலுள்ள பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து குடிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எமக்கு விளையாடுவதற்கும் தேகப் பயிற்சிகள் செய்வதற்குக்கூட ஒழுங்கான ஒரு மைதானமும் இல்லை.

மலையக மாணவர்களாகிய எமது பரிதாப நிலையினை கருத்திற்கொண்டு அமைச்சர்களும், அதிகாரிகளும் மற்றும் சமூக நலன் விரும்பிகளும் எனது பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மலையக தமிழ் மாணவர்களாகிய எங்களுக்கும் சமூகத்தில் சம அந்தஸ்த்தை ஏற்படுத்திக் கொடுக்கபடி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ். தாமரைச்செல்வன்
ஆண்டு 9.

●● மனம் செம்மையாக நிலைக்கப் பெறாதவனுக்கு அறிவில்லை. அந்த யோகம் இல்லாதவனுக்கு நிலையான சிந்தனை இல்லை. நிலையான சிந்தனை இல்லாதவனுக்கு அமைதி இல்லை. அமைதி இல்லாதவனுக்கு இன்பம் ஏது?

(6ம் பக்க தொடர்ச்சி)

## திருமாங்கல்யத்தி . . .

யாள்'' எனும் பெருமை பெற்ற குலப்பெயரை உலகிற்கு உணர்த்தி மங்கலமாய் வாழ்வோமாக!

### தமிழ்க்குலப் பெண்களின் அணிகலன்

தாலியை அணிந்த பெண்கள் குங்குமத்தைதான் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறக்கும்போதே இரு புருவங்களுக்கும் நடுவில் கணவனுக்கு கெடுதல் செய்யக்கூடிய ஒரு அலட்சுமி வசிப்பதாக வேதம் கூறுகிறது. இதனால், குங்குமத்தை வைத்துக்கொள்வதால் அந்த அலட்சுமி விலகி நீண்ட ஆயுளும், நன்மையும் பெருகும். அத்துடன் ஆதிபராசக்தி புவனேஸ்வரியின் பாதங்களை அர்ச்சனை செய்த குங்குமத்தை நெற்றியில் வைத்துக்கொள்வதனால் பிரமாவினால் எழுதப்பட்ட கெட்ட எழுத்துக்கள் அழிந்து நன்மைகள் பெருகும் என்பதும் சாஸ்திர மரபு. ஆனால் இன்றைய நாகரீக உலகின் நங்கையர்கள் தாலியை நாகரீக டிசைன்களுக்கேற்ப அணிவதும், குங்குமத்திற்குப் பதிலாக தங்களின் உடையலங்காரங்களுக்கேற்ப பலநிறப் பொடிகளை இட்டுக்கொள்வது மிகவும் வருந்தக்கூடிய விடயமாவதுடன், எமது கலாசார பண்புகளை இழிவுபடுத்தும் செயலாகவும் உள்ளது.

எனவே நாகரீக மோகத்தை ஒருபுறம் வைத்துவிட்டு எமது பண்பாட்டைக் காப்பதற்காகவும், அடுத்தவருக்கு முன்மாதிரியாகவும் நடந்துகொண்டால் அது எமக்கும் பெருமை 'எமது பெண்குலத்திற்கும் பெருமை தேடித்தருவதுமாகும்.

(5ம் பக்க தொடர்ச்சி)

## இந்து மதம்

திகளை மட்டுமே இந்துமதம் சொல்லியிருப்பதால் தான் பிறமதத்தினரைத் தன் மதத்துக்கு மாற்றும் முயற்சியில் இந்துமதம் ஒருபோதும் ஈடுபட்டதில்லை இந்துமதம் பிற மதங்களை வெறுப்பதில்லை. எல்லா மதங்களையும் தன்னோடு சமமாகவே கருதுகிறது.

மதத்துவேஷம் எந்தக்காலத்திலும், இந்துக்களால் ஆரம்பிக்கப்பட்டதில்லை. அதன் பரந்த கரங்கள் அத்தனை மதங்களையும் அணைத்துக்கொண்டே வளர்ந்திருக்கின்றன.

மதங்கள் மனிதனது வாழ்க்கையை நேர்ப்படுத்துகின்றன, நெறிப்படுத்துகின்றன.

மத நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இயற்கையானதும் அகம் சார்ந்ததுமாகும். அனைத்து மதங்களும் இன்றைய இளைஞரின் அகம் சார்ந்த ஆத்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வரவேண்டும். பொழுதுபோக்காகவும் பகுதிநேரமாகவுமல்லாமல் முழுநேரமாக இப்பணியில் ஈடுபட மதத்தலைவர்கள் முயலவேண்டும்.

*With Best Compliments*

*of*

# A WELL WISHER

# அஞ்சலி!



கொள்ளுப்பிட்டி நிமால்கா கார்டன்ஸ் ஏ. எம். டி. மொண்டிசோரி பாலர் பாடசாலையின் மாணவியும், இந்து கலாசாரம் பாலர் வட்டத்தைச் சேர்ந்தவருமான செல்வி ஷர்மிளா சிவராசா அண்மையில் கிராதாகர்களால் மிகக் குரூரமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்து நாம் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாய்ப் போனோம்.

செல்வி ஷர்மிளா பால்மணம் மாறாத பச்சைக் குழந்தை ஐந்து வயதே நிரம்பியபோதிலும் பாடசாலையில் கீர்த்திபெற்று முதல் மாணவியாகத் திகழ்ந்த அறிவுச்சுடர்.

கிராதாகரர்கள் இந்தப் பச்சையை எப்படிதான் கொலைசெய்ய துணிந்தனரோ? அந்தோ, நினைக்க நினைக்க நெஞ்சம் பதறுகிறது. சப்தநாடிகள் நின்று விடும்போலிருக்கிறது.

பாடசாலையில் ஆண்டுதோறும் நடைபெறும் உடையலங்காரப் போட்டியில் செல்வி ஷர்மிளாவே முதல் பரிசைப் பெற்றுவந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் காந்தி மகாத்மாவாக உடையணிந்து முதல் பரிசைப் பெற்றார். கடந்த ஆண்டு விசுவாமித்திர மாமுனிவராக வேடமணிந்து முதல் பரிசைப் பெற்றார்.

பாச மகளை இழந்து பரிதவிக்கும் சிவராசா தம்பதிகளின் துயரை எழுத்தில் வடிக்க இயலாது. எல்லாம் வல்ல இறைவன் சிவராசா தம்பதிகளுக்கு மனநிம்மதியை அளிக்க வேண்டுமென இந்து கலாசாரம் பிரார்த்திக்கின்றது.

## ஆலயக் கடமைகளோடு சமுதாய . . .

(3ம் பக்க தொடர்ச்சி)

யாற்றிய இந்துசமய திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் இத்தகைய விஜயங்கள் மூலமாகவே ஆங்காங்கு வாழும் மக்களின் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடிகிறது என்றும் சிந்தனைக்கு வழி திறக்கின்றது என்றும் குறிப்பிட்டார். அமைச்சரின் ஆலோசகர் திரு. சோ. சந்திரசேகரன் கூடுமானவரை முயன்று கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் மலையகத்தைப் பொறுத்தவரை உள்ள வளங்களைப் பயன்படுத்தியே பெற வேண்டிய நிலை எனவும் கூறினார். அமைச்சர் பேசுகையில் மலையக கல்விப் பிரச்சினை பின்னணியை விளக்கியதோடு நூற்றி ஆறு வருடங்களாகியும் வளர்ச்சியில் பின்தங்கி உள்ள இப்பாடசாலை கொழும்புக்கு அண்மையிலேயே உள்ளது. ஆதலின் இதுபற்றி கல்வி அமைச்சுடன் பேசத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பென்ரிற், பானஹம், சாலாவ போன்ற தோட்டங்களுக்கும் விஜயம் செய்த அமைச்சர் தோட்டப்புற மக்களின் அன்றாட பிரச்சினைகளை தெரிந்து கொண்டார்.

## பகவான் சத்திய சாயி

(4ம் பக்க தொடர்ச்சி)

1957லிருந்து சத்திய சாயி வெளியூர்களுக்குச் சென்று பொதுமக்கள் மத்தியில் ஆன்மீக உரை நிகழ்த்தத் தொடங்கினார்.

1965லிருந்து சாயியின் புகழ் உலகமெங்கும் பரவத் தொடங்கியது. ப்பிரசாந்தி நிலையத்தில் இன்று இந்தியா மட்டுமில்லை அயல் நாட்டு மக்களையும் காண முடிகிறது.

மக்களின் துயர் துடைப்பது ஒன்றே அவரது லட்சியம். இறையுணர்வை ஊட்டி மக்களைச் செம்மையான பாதையில் திருப்ப வேண்டும் என்ற புனிதப் பணியில் சத்திய சாயி தம் அருள் செயல்களை நிகழ்த்தி வருகிறார்.

அன்பு, தர்மம், சத்தியம், சாந்தி, அஹிம்சை என்ற ஐந்து லட்சியங்கள்தாம் பகவான் சத்திய சாயியின் தாரக மந்திரமாக, புனித வேள்வியின் சின்னமாக விளங்குகிறது.

# அன்பளிப்பு

"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீராவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே"

அத்தியாவசியமான, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றத் தகுந்ததுமான முக்கிய கட்டுரைகளை வெளியிடும் இந்துசமய திங்கள் இதழான இந்து கலாசாரம் இதழுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

– அன்பன்

## இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள
## விற்பனை கருமபீடம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அண்மையில் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட விற்பனைக் கரும பீடத்தில் உள்ள நூல்களும் ஆலய உபயோகத்திற்கான பொருட்கள் என்பவற்றின் விபரமும் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3 00 மணி வரை மேற்படி திணைக்கள கரும பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஆர்வ முள்ள இந்துசமய அபிமானிகள் இந்நூல்களையும், பொருட்களையும் கொள்வனவு செய்வதன் மூலம் இந்துசமய திணைக்களத்தின் மேலான செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்தவர்களாவார்கள்.

# இந்துமத நூல்களின் விலை விபரம்

| | | |
|---|---|---|
| 1 | மூவர் தேவாரம் | 650.00 |
| 2 | இந்துக் கலைக் களஞ்சியம் | 250.00 |
| 3 | அமுது கலசம் | 250.00 |
| 4 | **Essential of Hinduism** | 150.00 |
| 5 | இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் | 125.00 |
| 6 | அகில உலக இந்துமகா நாட்டு மலர் | 125.00 |
| 7 | மட்டக்களப்பு மாவட்ட திருத்தலங்கள் | 125.00 |
| 8 | திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் | 125.00 |
| 9 | பகவத்கீதை ஆங்கிலம் | 100.00 |
| 10 | முருகவேளின் பன்னிரு திருமுறைகள் | 100.00 |
| 11 | மதங்க சூளாமணி | 100.00 |
| 12 | **Study of Translation** | 100.00 |
| 13 | மட்டக்களப்பு ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் சுவாமிகள் | 50.00 |
| 14 | கதிர்காமம் பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 15 | மண்டூர் பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 16 | **Satkuru Yohaswami** | 20.00 |
| 17 | யோகசுவாமி | 20.00 |
| 18 | உடப்பு ஸ்ரீ அம்பாள் வரலாற்று நூல் | 20.00 |
| 19 | ஆரையூர்க் கோவை | 20.00 |
| 20 | பரமகம்ஷர் கூறிய பக்திக் கதைகள் | 15.00 |
| 21 | இராமாயணக் குட்டிக் கதைகள் | 10.00 |
| 22 | ஔவையார் அறிவுச் செல்வங்கள் | 10.00 |
| 23 | ஆலயமணி | 07.00 |
| 24 | கோபுரம் | 07.00 |
| 25 | ஸ்ரீ நீதிராஜசர்மா அவர்களால் இயற்றிப் பாடிய பக்திப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடா | 75.00 |

*With Best Compliments*

*From*

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

**MANUFACTURERS IN ALL KINDS OF**

## ALUMINIUM WARES

**170-172 OLD MOOR STREET COLOMBO-12**

Telephone: **35579**

இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு-13 149-பி ஜெம்பட்டா வீதி ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் 19-11-1990ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.